## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் தேதி வாதிகள் தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.720/2021

வா.சா. 1 ஹேமலதா

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

தாவாச் சொத்தானது எனது தகப்பன் வழி தாத்தா பழனியப்பன் என்பவருக்கு 21.04.1975 தேதியிட்ட வா.த.சா.ஆ.1 கிரைய ஆவணப்படி பாத்தியமாகும். என் தாத்தா பழனியப்பனுக்கு 1 ம் பிரதிவாதி பாப்பாத்தி, 2 ம் பிரதிவாதி சம்பூர்ணம், 3 முதல் 7 பிரதிவாதிகள் மற்றும் வாதிகள் ஆகிய நாங்கள் வாரிசு என்றால் சரிதான். தாவாச் சொத்துக்களைப் பொருத்து என் தாத்தா விருப்புறுதி ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். என் தாத்தா இறந்த பிறகு வாதிகளாகிய நாங்களும், 1 முதல் 7 பிரதிவாதிகளும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். வாதிகளாகிய நாங்களும், 1 முதல் 7 பிரதிவாதிகள் வாரிசு என்று காட்டுவதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளோம். 6 ம் பிரதிவாதி முருகேசன் என்பவர் மட்டும் எங்கள் தாத்தாவிற்கு வாரிசு என்று சொல்லி மோசடியாக வாரிசு சான்று பெற்றுள்ளார் என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதி மோசடியாக பெற்ற வாரிசு சான்றின் அடிப்படையில் என் தாத்தாவிற்கு அவர் மட்டுமே வாரிசு என்று காட்டி அவரது மகளான 7 ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தை பொருத்து வா.த.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தில் 6 ம் பிரதிவாதி பெற்ற வாரிசு சான்றை ஒரு ஆவணமாக இணைத்துள்ளார் என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதி பெற்ற வாரிசு சான்றானது மற்ற வாரிசுகள் இருக்கும் விபரத்தை மறைத்து பெற்றுள்ளதால் அது மோசடியானது ஆகும். அதன் அடிப்படையில் ஏற்பட்டுப்பட்ட வா.த.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணமும் மோசடியானது என்றால் சரிதான். 7 ம் பிரதிவாதி லதா என்பவர் மோசடியான செட்டில்மெண்ட் ஆவணத்தின் பேரில் 8 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த வா.த.சா.ஆ.3 கிரைய ஆவணமும் மோசடியானது என்றால் சரிதான்.

தாவாச் சொத்தில் கட்டிடம் எதுவும் இல்லை. தாவாச் சொத்தானது வாதிகள் மற்றும் 1 முதல் 7 பிரதிவாதிகள் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தில் பொதுவில் 3/5 பங்கு பாத்தியம் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு உண்டான பங்கை பொருத்து முதல் நிலைத் தீர்ப்பாணை பிறப்பிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை.

**<u>மறு விசாரணை:-</u>** **இல்லை**